## தலைப்பு 286 – காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தெம்பர் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 ஆந் திகதிய காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) கடந்த ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) சொத்துக்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 ஆண்டின் திசெம்பர் 31 திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA – 06) இல் அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி உபகரணங்கள் ஆகிய சொத்துக்களின் ஆரம்ப மீதிகள் மற்றும் 2020 ஆண்டின் திசெம்பர் 31 திகதி சமர்பித்த நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA – 06) இறுதி மீதிக்கிடையில் ரூபா 129,899 ஆன வித்தியாசம் காணப்பட்டதுடன், அவ் வித்தியாசத்திற்கான காரணத்தை கணக்கு குறிப்பு மூலம் சமர்பித்திருக்கவில்லை. | 2021 ஆண்டில் ACA 06 கூற்று எம்மால் தயாரிக்கப்பட்டிருந்தால் ஆரம்ப மீதயாக 2020 இறுதிக் கணக்கு மீதியை பயன்படுத்த முடியுமாக இருந்திருக்குமான போதும் 2021 ஆண்டு முதல் ACA6 கூற்றை தயாரிப்பதற்கு பதிலாக திறைசேரி கணனி பிரசுர கூற்றை சமர்பிக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளதால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடந்த ஆண்டின் இறுதி கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக முன்கொண்டு செல்ல வேண்டும். |
| (ii) | 2021 ஆண்டின் திசெம்பர் 31 திகதிக்கு தயாரிக்கப்பட்ட நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA – 06) திணைக்களத்திற்கு சொந்தமான கிரயம் ரூபா 129,715,000 ஆன 19 வாகனங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைத்த 19 வாகனங்களின் பெறுமதியை 2022 மே மாதம் CIGAS கணனி தொகுதி மூலம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாகன பெறுமதி நிதிக்கூற்றுக்கள் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | திணைக்களத்திற்கு சொந்தமான ரத்மல் வெவ கமநல சேவை மத்திய நிலையம் பயன்படுத்தும் டெக்டர் வண்டி மற்றும் முனுகம்வெஹர பிரதேச செயலகத்தில் நிறுத்தி வைத்துள்ள நீர் பவுசரின் பெறுமதியை 2021 ஆண்டின் திசெம்பர் 31 திகதி சமர்ப்பித்த நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA – 06) உள்ளடக்கி இருக்கவில்லை. | இலக்கம் 37 ஸ்ரீ 5367 கொண்ட டெக்டர் வண்டியின் மற்றும் இலக்கம் 42 – 5035 கொண்ட பவுசர் வண்டியின் பதிவை உறுதி செய்து கொள்ள மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்தில் இருந்து 2022.04.05 திகதி விசாரிக்கப்பட்டுள்ளது. உரிய பதிவு சான்றிதழ்களை பெற்றுக் கொண்ட பின்னர் இந்த வாகனங்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்கள் மூலம் சமர்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்வு சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டின் திசெம்பர் 31 திகதி தயாரிக்கப்பட்ட நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA – 06) உள்ளடக்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 18,507,000 ஆன 06 வாகனங்கள் பயன்படுத்தும் அலுவலகம் அல்லது நிலையம், பதிவுப் புத்தகம் மற்றும் பண்டக கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வாகனங்கள் 06 இல் 05 உரிமை தீர்ப்பனவு திணைக்களம், காணி அமைச்சு மற்றும் தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் கடிதம் மூலம் பரிமாற்றப்பட்டு இருப்பதுடன் 300-3812 இலக்க கார் வண்டியொன்று மற்றும் 32-1180 இலக்க ஜீப் வண்டியொன்றும் ஏலவிற்பனை செய்யப்பட்டுள்ளது. | குறித்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும் |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி ஆணையாளர் நாயகத்தினால் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் மாகாணங்களிற்கு இடையிலான கமநல குடியிருப்புக்களிலிருந்து காணி குத்தகை வருமானம் திரட்டுவதுடன், 2021 ஆண்டு இறுதியில் நிலவிய ரூபா 84,916,237 ஆன நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நிலுவை வருமானத்திலிருந்து 53 சதவீதம் அதாவது ரூபா 45,145,773 தொகை 2 | 2021.12.31 திகதி அறவிட வேண்டிய நிலுவை காணி குத்தகை அளவிலிருந்து 2022.03.31 திகதியளவில் அறவிட்டுள்ள நிலுவை குத்தகை வருமானம் ரூபா 7,379,493 ஆனதுடன் எஞ்சிய மீதியை எதிர்காலத்தில் பின்வரும் செயற்பாடுகளை பின்பற்றி அறவிட எதிர்பார்க்கப்படுகிறது.<br>• குத்தகைதாரருக்கு நிலுவை குத்தகை செலுத்துமாறு 95/5 சுற்றறிக்கையில் படிவம் பிரகாரம் அறிவூட்டல்.<br>• குத்தகைதார்களிற்காக பிரிவு திகதி நிகழ்துதல்.<br>• அபிவிருத்தி உத்தியோகத்தர்/குடியிருப்பு | திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை காலரீதியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாக உள்ளதுடன், 2021 ஆண்டில் நிலுவை வருமானத்திலிருந்து அறவிட்டிருந்த தொகை ரூபா 5,181,448 மாத்திரமே ஆகும். | உத்தியோகத்தர் மூலம் களத்தில் குத்தகைதாரர்களை குத்தகை செலுத்தலுக்கு அறிவூட்டல்.<br>• டென்டர் மூலம் காணியை பெற்று இதுவரை குத்தகை செலுத்தாத மற்றும் அபிவிருத்தி செய்யாத குத்தகைதாரர்களை கா.அ.க சட்ட 106 பிரிவு மூலம் அலுவலகத்திற்கு அழைத்து விசாரணை நடவடிக்கை செய்தல்.<br>• உரிய முறையில் குத்தகை செலுத்தும் குத்தகைதாரருக்கு குத்தகை பத்திரத்தை விரைவில் வழங்கச் செய்தல். | |
| (ஆ) | திணைக்களத்தால் குத்தகை அறவிடும் காணிகளிற்குரிய குத்தகை பேரேடொன்றை பேணிச் செல்லாததால், 2021 ஆண்டில் நிதி செயலாற்றல் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரூபா 105,312,901 ஆன காணி மற்றும் ஏனைய குத்தகை வாடகை வருமானம் மற்றும் ரூபா 100 மில்லியனான மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சரியான தன்மையை பரிசோதிக்க முடியவில்லை. | பிரதான அலுவலகத்தினால் ஒவ்வொறு பிரதேச செயலக மட்டத்திலுள்ள நீண்ட கால குத்தகைதாரரிற்காக குத்தகை பேரேட்டை பேணிச் செல்வது பௌதீக ரீதியாக செய்ய முடியாததால் மாகாண ரீதியான அலுவலங்களை அமைத்து பிரதேச செயலகங்கள் மட்டத்தில் குத்தகை திரட்டும் செயற்பாட்டை மேற்பார்வை செய்ய கடமைகளை பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இக் கடமைகளை இலகுபடுத்த அரச காணி தகவல்கள் மற்றும் முகாமைத்துவ தொகுதியை (e-slims) அறிமுகப்படுத்தியுள்ளதுடன் அனைத்து நீண்ட கால குத்தகைதாரர்களையும் இதற்கு உள்ளடக்க எதிர்பாரக்கப்படுகிறது. | திணைக்களம் குத்தகை வழங்கியுள்ள காணிகளிற்கு உரியதாக காணி குத்தகை பேரேடொன்றை தயாரித்து அதன் பிரகாரம் வருடாந்த வருமான மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும். |
| (இ) | தெபரவெவ, மஹியங்கன, மொனராகல மற்றும் அம்பாறை ஆகிய 04 மாகாண இடை அலுவலகங்களிலிருந்து மாத்திரம் 2020 மற்றும் அதற்கு முன் ஆண்டுகளிற்குரிய ரூபா 20,676,543 ஆன விடுபட்ட காணி குத்தகை வருமானத்தை மீளாய்வாண்டில் இனங்கண்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளிற்குரிய நிலுவை காணி குத்தகை தொடர்பாக உரிய முறையில் அறிக்கைகளை பேணிச் செல்லவில்லை என உறுதியாவதுடன் மொத்த குத்தகை பேரேடொன்றை சமர்பிக்காத காரணத்ததல் ஏ.சீ.ஏ 1(i) படிவம் மூலம் 2021 ஆண்டு திசெம்பர் 31 திகதிக்கு | குறித்த தொகை விடுபட்ட நிலுவை அல்லாததுடன் 2021 ஆண்டில் இனங்கண்ட குத்தகை நிலுவையாகும். மதிப்பீட்டிற்காக நிளஅளவை திணைக்களத்தினால் அளவையிட்ட காணி விபரங்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுவதுடன் வருடாந்த குத்தகை தொகையை தயாரித்து கணக்கீடு செய்ய முடியுமாவது அவ்வாறு மதிப்பிட்ட பின்னராகும். காணி குத்தகை கணக்கிடப்படுவது உடமையை கையளித்த பின் பல வருடங்களின் பின்னராகும். இச் செயற்பாட்டின் பலவீனங்களை இனங்கண்ட பின்னர் 2021.10.13 திகதிய இலக்கம் 2021/6 கொண்ட அரச காணிகளிலிருந்து அறவிட வேண்டிய குத்தகை வருமானத்ததை ஒழுங்கமைத்தல் எனும் தலைப்பில் காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட | காணி குத்தகை வருமானத்தை குறித்த ஆண்டிளே இனங்காணக் கூடியவாறு காணி குத்தகை பேரேடொன்றை பேணிச் செல்ல வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா 84,916,237 ஆன நிலுவை குத்தகை வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் காணிகளிற்குரியதாக சராசரி மதிப்பீட்டின் மீது குத்ததை தொகை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | |

**2.2 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டில் 07 மூலதன செலவின விடயங்களிற்காக ரூபா 140,000,000 ஏற்பாடொன்று வழங்கியிருந்ததுடன் அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 305 சதவீதத்திலால் அதிகரிப்பாகும். செலவின விடயங்களிற்காக ஒதுக்கியிருந்த ரூபா 2,000,000 தொகை மொத்தமாக செலவிடப்படாததுடன், எஞ்சிய செலவின விடயங்களிற்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் செலவிடப்பட்டிருந்த மொத்த தொகை ரூ. 42,555,588 ஆனது. அதன் பிரகாரம் ஏற்பாட்டில் 70 சதவீதம் அதாவது ரூபா 97,444,412 தொகை மீளாய்வாண்டு இறுதியிலும் எஞ்சியிருந்தது. | இலக்கம் 21/1596/304/134 மற்றும் 2021.08.31 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் எஞ்சியிருந்த ஏற்பாடில் கடப்பாடு ஏற்படுத்திக் கொண்டிருக்காத அனைத்து நடவடிக்கைகளையும் இடைநிறுத்தி ஏற்பாடு பிற்போடப்பட்டது. | பெற்றுக் கொண்ட ஏற்பாட்டை முழுமையாக பயன்படுத்த வேண்டும். மறைத்து வைத்தல் தொடர்பாக அறிக்கையிடல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகனிள் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நி.பி. 104(3) மற்றும் (4) | - | நட்டமொன்று அல்லது இழப்பொன்று ஏற்பட்டவுடன் முழுமையான அறிக்கையை சமர்பிக்க 07 நாட்களிற்கு அதிக தாமதமொன்று ஏற்படுமென எதிர்பார்ப்பின் ஆரம்ப அறிக்கை ஒன்றை உடனடியாக அனுப்ப வேண்டிய போதும், 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது 05 வாகனங்களின் ஏற்பட்ட விபத்து தொடர்பாக ஆரம்ப அறிக்கையை சமர்பிக்க 18 நாட்களிற்கும் 4 மாதங்களிற்கும் இடையிலான காலமொன்று கடந்திருந்ததுடன் அதற்குரிய முழுமையான அறிக்கை 2022 மார்ச் 31 அளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய தொற்று நிலைமை காரணமாக நிறுவனங்களின் கடமைகளை பொதுவானவாறு பேணிக் கொள்ள முடியாததால் இவ் விபத்துக்கள் தொடர்பாக நி.ப. 104(4) பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது. தற்போது குறித்த அறிக்கை தயாரிக்க நடவழ்கை எடுக்கப்படுகிறது. | நி.பி 104 (3) மற்றும் (4) பிரகாரம் அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும். |
| (ii) நி.பி. 371(2) | 143,500 | நிதிப் பிரமாணம் பிரகாரம் | இம் முற்பணம் பயிற்சி | அங்கீகார |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஏதேனும் விஷேட செயற்பாட்டிற்காக பதவிநிலை உத்தியோகத்தரிற்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 உச்சம் வரை நிமித்த உப கட்டுநிதி வழங்க முடியுமான போதும், 2021 பெப்ரவரி 15 திகதி பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு குறித்த எல்லையை மீறி நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்ததுடன் உள்ளவாறான செலவு ரூபா 92,765 ஆகவிருந்தது. | நிகழ்சித் திட்டங்களை நடாத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளதுடன் ஊழியர்கள் கிளிநொச்சி சுற்றுலா விடுதியில் தங்கியதன் காரணமாக திட்டமிட்ட தங்குமிட செலவு, உபசரண செலவு, எரிபொருள் மற்றும் காகிதாதி செலவு போன்ற செலவுகளை குறைத்துக் கொள்ள முடியுமானதால், மதிப்பிட்ட கிரயத்தை குறைத்துக் கொள்ள முடியுமானது. எவ்வாறாயினும், எல்லையை விஞ்சி செல்லாதவாறு உப கட்டுநிதி வழங்காதிருக்க பொறுப்பேற்குமாறு அலுவலர்கள் அறிவூட்டப்பட்டனர். | எல்லையை விஞ்சி நிமித்த உப கட்டுநிதி வழங்குவதான ால் அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (iii) | நி.பி. 371(5) | 166,364 | கட்டுநிதியொன்றை வழங்கியதன் பின்னர் குறித்த செயற்பாட்டை முடிவுறுத்தி 10 நாட்களில் அதனை தீர்க்க வேண்டிய போதும் 2021 ஆண்டினுள் 11 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த முற்பணத்தை தீர்ப்பதற்குரிய செயற்பாடுகள் பூர்த்தியாகி 24 நாட்கள் முதல் 04 மாதங்கள் வரை கால வீச்சளவொன்று கடந்திருந்தது. | நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நிலைமையின் மீது, கடமை தேவைப்பாட்டின் மீது மற்றும் மட்டுப்படுத்தலுடன் அலுவலர்களை அழைத்த காரணத்தால் முற்பண தீர்ப்பனவு தாமதமாகியுள்ளது. எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்க அலுவலர்கள் அறிவூட்டப்பட்டனர். | நிமித்த கட்டுநிதியை தாமதமின்றி தீர்க்க வேண்டும். |
| (ஆ) | பொது நிர்வாக மற்றும முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை<br>------------------- | | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட சுற்றறிக்கையின் 3.1 பந்தி | - | அனைத்து எரிபொருள் பரிசோதனைக்கும் பின்னர் 12 மாத கால எல்லையில் அல்லது 25,000 கிலோமீற்றர் தூர ஓட்டத்தின் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பான பிரதான பழுதுபார்த்தலுக்குப் | 2021/2022 ஆண்டுகளில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக எரிபொருள் பரிசோதனை செய்ய முடியாதுள்ளதுடன் தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் பிரச்சினை | சுற்றறிக்கை பிரகாரம் எரிபொருள் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலாவதாக ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதும், திணைக்களத்திற்கு சொந்தமான 30 வாகனங்களிற்காக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஏற்பாடு காரணமாக 2022/2023 ஆண்டிற்காக எரிபொருள் பாவணை பரிசோதனை மேற்கொள்ளவும் பிரச்சினையாகவுள்ளது. அதனால் தற்போது இறுதியாக மேற்கொண்ட எரிபொருள் பரிசோதனையின் அங்கீகார எரிபொருள் பாவணை அளவு பிரகாரம் வாகனங்கள் செலுத்தப்படுகின்றன. | |
| (ii) | 2018 சனவரி 24 திகதிய இலக்கம் 02/2018 கொண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 02 படிவம். | - | சுற்றறிக்கை மூலம் சமர்பித்துள்ள படிவத்தை அடிப்படையாகக் கொண்டு திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்க வேண்டிய போதும், அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | இத் திணைக்களம் ஏனைய அரச நிறுவனங்களிற்கிடையில் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் கட்டளை சட்டங்கள் போன்ற சட்டரீதியான சட்டகத்தினுள் அரச காணிகள் தொடர்பாக தனது கடமைப் பொறுப்பை மேற்கொள்வதால் திணைக்களத்திற்கு புதிதான முறைமையொன்றினுள் மனிதவள திட்டத்தை தயாரித்துக் கொள்ள வேண்டும். 2022 ஆண்டின் இரண்டாம் காலாண்டினுள் இதனை பூர்த்தி செய்யும் இயலுமை உள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். | மனிதவள அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்க வேண்டும். |
| (iii) | 2018 சனவரி 24 திகதிய 05/2018 (1) கொண்ட சுற்றறிக்கையின் திருத்திய 2008 பெப்ரவரி 06 திகதிய இலக்கம் 05/2008 கொண்ட சுற்றறிக்கை | - | சுற்றறிக்கை பிரகாரம் திணைக்களத்தினால் பிரசைகள்/சேவைபெறுனர் பிரகடனத்தை தயாரித்து செயற்படுத்த வேண்டிய போதும், அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் இத் திணைக்களத்திற்கு பிரசைகள்/சேவைபெறுனர் பிரகடனமொன்றை தயாரிக்க வேண்டிய போதும், கடந்த காலத்தினுள் நிலவிய நிலைமை மீது அதனை தயாரிக்கும் சில தாமதமொன்று ஏற்பட்டுள்ளதுடன், இவ்வாண்டினுள் பூர்த்தி செய்யும் இயலுமை உள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். | பிரசைகள்/சேவைபெறுனர் பிரகடனத்தை தயாரிக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | அரச கணக்குகள் சுற்றறிக்கை<br>--------------------- | | | | |
| | 2017 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 262/2017 கொண்ட சுற்றறிக்கையின் 4 பிரிவு | 1,143,800 | 2018 ஆண்டு மற்றும் அதன் பின்னர் மரணித்த மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளை, சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு தாமதமின்றி தீர்க்க வேண்டியதாக குறிப்பிட்டுள்ள போதும் 2021 ஆண்டினுள் மரணித்த அலுவலர் ஒருவரிடமிருந்து மற்றும் ஓய்வு பெற்ற 08 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் தொகையை 2021 ஆண்டு திசெம்பர் 31 திகதி தயாரித்த அரச உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 04 ஊழியர்களிற்கு உரிண கடன் மீதிகள் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட்டு தீர்க்கப்பட்டுள்ளன. ஏனைய 04 ஊழயர்களிற்கு பரிமாற்றிய ஓய்வூதிய சம்பளம் அல்லது ஓய்வூதிய பணிக்கொடை பணம் செலுத்துகையில் கடன் மீதிகளை தீர்க்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். | கடன் மீதிகளை தாமதமின்றி தீர்க்க வேண்டும். |
| (ஈ) | 2016 இலக்கம் 12 கொண்ட தகவல் அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பான சட்டத்தின் 41 பிரிவு பிரகாரம் அமைச்சர் தயாரித்த கட்டளையின் 6 ஆவது கட்டளை | - | RTI 03 படிவம் பிரகாரம் தகவல்கள் விண்ணப்ப பதிவேடொன்றை பேணிச் செல்ல வேண்டிய போதும் திணைக்களம் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | RTI 03 படிவம் பிரகாரம் தகவல்கள் விண்ணப்ப பதிவேடொன்றை பேணிச் செல்ல தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதுடன், தகவல்களை கோரும் நபர்களிற்கு உரிய காலத்தினுள் தகவல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | RTI 03 படிவம் பிரகாரம் தகவல்கள் விண்ணப்ப பதிவேடொன்றை பேணிச் செல்ல வேண்டும். |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொது வைப்புக் கணக்குகள் 03 தொடர்பாக 2021 ஆண்டில் திசெம்பர் 31 திகதி நிலவிய ரூபா 68,794,932 மீதியில் உள்ளடங்கிய 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,138,699 ஆன வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 02 ஆண்டுகளை விஞ்சிய வைப்புப் பெறுமதி ரூபா 86,651 தொகையொன்றை 2022 மே வரையான காலத்தினுள் தீர்த்துள்ளதுடன் வைப்பாளர்களை அறிவூட்டி 2022 ஆண்டில் கோரிக்கை முன்வைக்கப்படவில்லை எனில் அரச வருமானத்திற்கு செலவு வைத்து தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். | 02 ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

**(அ) அரச காணிகள் தகவல் முகாமைத்துவத் தொகுதி (e Slims)**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | அரச காணி முகாமைத்துவத்தை வினைத்திறனாக செய்வதற்கு அரச காணி தகவல் முகாமைத்துவ தொகுதியை (e-Slims) 2013 ஆண்டில் ஆரம்பித்திருந்ததுடன், 2021 ஆண்டு இறுதியளவில் அதற்காக செலவிட்ட கிரயம் ரூபா 159,456,247 ஆகவிருந்தது. 07 ஆண்டுகளை விஞ்சிய காலமாக இக் கருத்திட்டத்தை செயற்படுத்தி இருந்த போதும், குறித்த தகவல் தொகுதிக்கு தகவல்களை உள்ளீடு செய்த காணி துண்டுகளின் அளவு 1,306,917 ஆனதுடன் 2021 ஆண்டு தகவல் தொகுதிக்கு உள்ளீடு செய்ய திட்டமிட்ட 100,000 காணித் துண்டுகளில் 62,785 இனை மாத்திரம் உள்ளீடு செய்யப்பட்டிருந்தன. இக் கருத்தட்டத்தின் மூலம் உள்ளீடு செய்ய வேண்டிய காணித் துண்டுகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காக எடுக்கும் காலம் தொடர்பாக மதிப்பீடொன்று செய்யப்படவில்லை. | 2021 ஆண்டினுள் 100,000 காணித் துண்டுகளின் தகவல்களை தொகுதிக்கு உள்ளீடு செய்ய திட்டமிட்டிருந்த போதும் Covid-19 தொற்று நிலைமை காரணமாக பிரதேச செயலங்களின் காணிப் பிரிவின் அலுவலர்கள் கள பரிசோதனைக்கு செல்வது பிரச்சினைகுள்ளானதில் காணித் துண்டுகள் தொடர்பாக பூரண தகவல்களை உள்ளீடு செய்ய கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் அவ் வாண்டினுள் 62,785 காணித் துண்டுகள் மாத்திரம் தரவு தொகுதிக்கு உள்ளீடு செய்யப்பட்டிருந்தன. | அரச காணி முகாமைத்துவத்திற்கான தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியுமானவாறு அரச காணி தொடர்பான தகவல் தொகுதி ஒன்றை மதிப்பிட்ட காலத்தினுள் தயாரித்து முடிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அரச காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் வருமானம் சேகரித்தல் 09 மாகாண அலுவலகங்களினால் மற்றும் 08 பிரதி காணி ஆணையாளர் அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் 2021 ஆண்டில் சேகரித்த வருமானம் மற்றும் 2021 ஆண்டு இறுதியளவில் நிலுவை குத்தகை பெறுமதி தொடர்பான தகவல்களை இத் தொகுதி மூலம் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தன. | அரச காணிகள் கட்டளை சட்டத்தின் கீழ் ஏதேனும் பிரதேச செயலக பிரிவில் வெளியிடப்பட்ட அனைத்து காணிகள் தொடர்பான தகவல்களை உள்ளீடு செய்யும் வரை சரியான கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது நிலுவை கட்டுப்பாட்டுக் கணக்கு e-Slims தொகுதி மூலம் பிரசுரிக்க முடியாது. 2022.03.01 திகதி முதல் செயற்படும் வகையில் காணிகள் அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் மற்றும் ஒப்படைப் பத்திரம் தயாரிப்பது போன்று அரச காணிகள் கட்டளை சட்டத்தின் கீழ் குத்தகை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல், குத்தகை பத்திரம் தயாரித்தல் மற்றும் வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்குதல் e-Slims தொகுதி மூலம் மாத்திரம் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிலுவை குத்தகை பணம் தொடர்பான தகவல்களை தொகுதி ஊடாக எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளும் இயலுமை காணப்படுகின்றது. | குறித்த ஆண்டில் சேகரித்த வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு தகவல் தொகுதியை பேணிச் செல்ல வேண்டும். |
| (iii) | 2021 ஆண்டில் அரச காணிகள் முகாமைத்துவ தொகுதி (e-Slims) ஊடாக காணிகள் அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் 10,000 புதிய ஒப்படைப் பத்திரங்களை, 2,000 புதிய அனுமதிப் பத்திரங்கள் மற்றும் 500 நீண்டகால குத்தகை அனுமதிப் பத்திரங்களை வழங்க திட்டமிட்டிருந்த போதும், 2021 ஆண்டு திசெம்பர் 31 திகதியளவில் வழங்கிய ஒப்படைப் பத்திரங்கள், அனுமதிப் பத்திரங்கள் மற்றும் குத்தகை பத்திரங்களின் எண்ணிக்கை முறையே 7414 ஆக 484 ஆக மற்றும் 75 ஆகவிருந்தன. | 2021 ஆண்டில் (e-Slims) ஊடாக 10,000 ஒப்படைப் பத்திரங்களை பிரசுரிக்க திட்டமிட்டிருந்ததுடன் அவ்வாண்டினுள் 7,414 ஒப்படைப் பத்திரங்களை மாத்திரமே பிரசுரிக்க இயலுமை கிடைத்திருந்தது. அவ்வாறே 2021 ஆண்டில் (e-Slims) ஊடாக 2,000 புதிய அனுமதிப் பத்திரங்கள் மற்றும் 500 நீண்ட கால குத்தகை அனுமதிப் பத்திரங்களை வழங்க திட்டமிட்டிருந்த போதும், 484 புதிய அனுமதிப் பத்திரங்கள் மற்றும் 75 நீண்ட கால குத்தகை அனுமதிப் பத்திரங்களை மாத்திரம் வழங்க ஆண்டு பூராவும் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக இருந்தது. | வருடாந்த இலக்கை திட்டமிட்ட பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | காணிகள் அமைச்சின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் அரச காணிகளின் தகவல்களை திரட்டுகையில் நாடலாவிய மதிப்பீடொன்றை 2020 இறுதி காலாண்டில் ஆரம்பித்திருந்ததுடன், அதற்காக 10 மில்லியன் மதிப்பீட்டு படிவங்களை அரச வெளியீட்டுத் திணைக்களத்திடம் இலவசமாக பிரசுரித்து நாடுபூராவும் கிராம | அரச காணிகள் தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொண்டு காணி தகவல் தொகுதியொன்றை தயாரிப்பதற்காக 2020 ஆண்டின் இறுதிப் பகுதியில் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம், அதன் ஆரம்ப செயற்பாடாக தகவல் திரட்டும் படிவமொன்றை பிரசுரித்து அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ளதுடன் தற்போது கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் தகவல்கள் திரட்டப்படுகின்றன. இந் வேலைத் திட்டம் 2022 ஜுன் 30 | காணி மதிப்பீட்டு நடவடிக்கையை விரைவில் பூர்த்தி செய்து திரட்டப்படும் தகவல்களின் பிரகாரம் திணைக்கள காணிப் பதிவேடு மற்றும் தகவல் தொகுதியை நாளாதுவரையாக் க நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர் பிரிவுகள் காப்புச் செய்யப்படும் வகையில் விநியோகிக்கப்பட்டிருந்தன. குறித்த மதிப்பீட்டின் முன்னேற்றம் 2021 ஆண்டு திசெம்பர் 31 திகதியளவில் அடைந்து கொண்டிருக்காத காரணத்தால் இம் மதிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்ட அரச காணிகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | திகதியுடன் முடிவடையவிருந்த போதும், நாட்டில் நிலவும் நிகழ்கால நிலைமை காரணமாக அதன் கால எல்லை 2022 ஒக்டோபர் 31 திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. | எடுக்க வேண்டும். |

**(இ) பிம்சவிய கருத்திட்டம்**

--------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2021 ஆண்டில் பிம்சவிய கருத்திட்டத்தின் கீழ் திணைக்களத்தினால் காணி கச்சேரிகளை நடாத்துதல், அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்,ஒப்படை பத்திரம் விநியொகித்தல், நடமாடும் சேவை நடாத்துதல், பிரிவு தினம் நடாத்துதல் மற்றும் பிரச்சினைக்கு தீர்வு தேடுதல் போன்ற செயற்பாடுகளை திட்டமிட்டிருந்ததுடன், காணி கச்சேரிகளை நடாத்துவதை தவிர ஏனைய செயற்பாடுகளின் முன்னேற்றம் 4 இற்கும் 43 சதவீதத்திற்கும் இடையில் கீழான வீச்சளவில் காணப்பட்டன. | தேசிய கொள்கையின் மீது எவ்வித சட்டரீதியான ஆவணமும் இன்றி அரச காணிகளை பயன்படுத்தும் நபர்களுக்கு சட்டரீதியான ஆவணங்களை வழங்க நடவடிக்கை எடுத்த காரணத்தால் 2021 ஆண்டின் முதல் காலாண்டில் சாதாரண ஆண்டொன்றை விட அதிக அளவான காணி கச்சேரிகள் நடாத்தப்பட்டன. 2021 ஆண்டினுள் மாகாணங்களிறகு இடையிலான அலுவலகங்கள் மற்றும் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் மற்றும் ஒப்படைப் பத்திரம் 35,005 மற்றும் 19,906 விநியோகிக்கப்பட்டன. 2021 ஆண்டு பூராவும் நிலவி கொவிட் தொற்று நிலைமையுடன் நாடு அடிக்கடி முடக்கப்பட்டதன் காரணமாக திட்டமிட்ட கள கடமைகளை மேற்கொள்ள முடியாதிருந்துள்ளன. | திட்டமிட்ட இலக்குகளை அடைந்து கொள்ள வினைத்திறனாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | பிம்சவிய வேலைத் திட்டம் செயற்படுத்தப்படும் 68 பிரதேச செயலக பிரிவுகளில் 20 காணி கச்சேரிகளை நடாத்த திட்டமிட்டு 10 பிரதேச செயலகங்களில் 177 காணி கச்சேரிகள் நடாத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், அநுராதபுர மாவட்டத்தில் ராஜாங்க பிரதேச செயலக பிரிவில் மாத்திரம் நடாத்திய கச்சேரிகளின் எண்ணிக்கை 92 ஆனதுடன் அது வருடாந்த இலக்கிலும் அதிக பெறுமானத்தை கொண்டிருந்தது. அதன் பிரகாரம் நடாத்த முடியுமான வரவேற்கத்தக்க காணி கச்சேரிகளின் எண்ணிக்கை தொடர்பாக கவனம் செலுத்தாது மிகக் குறைந்த இலக்கிலிருந்து திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | 2020 – 2021 ஆண்டுகளில் நிலவி சூழ்நிலை பிரகாரம் மக்களை ஒன்றுதிரட்டி காணி கச்சேரி நடாத்த காணப்பட்ட அசவ்கரியத்தின் மீது பௌதீக ரீதியாக நடாத்த எதிர்பார்த்த காணி கச்சேரிகளின் அளவு திட்டமாக காட்டப்பட்டுள்ளது.<br><br>அங்கு, ராஜாங்கன பிரதேச செயலக பிரிவு, அநுராதபுர இடை மாகாண அலுவலகம் மூலம் கட்டுப்படுத்தப்படும் அரச காணியுடன் கூடிய காணி பிரச்சினைகள் அதிக பிரதேசமொன்று ஆகையால் நிளஅளவை திணைக்களத்தின் விஷேட அளவை வேலைத்திட்டதின் மீது ஏனைய நிறுவனங்களினதும் உதவியுடன் மேற்கொள்வதால் காணிக் கச்சேரி அதிக அளவொன்று நடாத்தப்பட்டது. | பௌதீக ரீதியாக மேற்கொள்ள முடியுமான உச்ச அளவின் அடிப்படையில் வருடாந்த செயலாற்றுகை இலக்கை அமைத்து அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 வருடாந்த செயல் நடவடிக்கை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆண்டு வரை தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை அறிக்கை மூலம் திணைக்கள நிலுவை வருமானத்தை அறவிடல் மற்றும் அது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் அரச காணிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் எனும் மூலஉபாயம் தொடர்பாக மதிப்பிட்ட இலக்கு மற்றும் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கியிருந்த போதும், 2021 ஆண்டிற்காக தயாரித்த செயல் நடவடிக்கை அறிக்கையில் அவ் இலக்குகள் மற்றும் முன்னேற்றம் உள்ளடக்கி இருக்கவில்லை. அதன் பிரகாரம் நிலுவை வருமானம் அறவிடல், அனுமதியற்ற கைப்பற்றுதல் தொடர்பாக முயற்சி எடுத்தல் மற்றும் அதனுடன் தொடர்பான சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை பரிசோதிக்க முடியவில்லை. | 2021 ஆண்டு செயல் நடவடிக்கை அறிக்கையில் உள்ளடங்கிய திணைக்கள முன்னேற்றத்தை காட்டும் படிவத்தை பாவணையின் வசதியை நோக்காகக் கொண்டு காணி ஆணையாளர் நாயக திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பதிவேடுகளில் முன்னேற்றத்தை காட்டியுள்ளது. அவ்வாறு படிவத்தை மாற்றிய காரணத்தால் நிலுவை வருமானம் அறவிடல், அனுமதியற்ற கைபற்றல் மற்றும் அதனுடன் தொடர்பான சட்ட செயற்பாடுகளின் முன்னேற்றத்தை உள்ளடக்கியில்லாத போதும், அது தொடர்பான தகவல்கள் திணைக்களத்திடம் உள்ள பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | திணைக்களத்தின் நிலுவை வருமானங்களை அறவிடல், அனுமதியற்ற கைப்பற்றல் தொடர்பாக நடவடிக்கை எடுக்க உரிய முன்னேற்றத்தை வருடாந்த செயல் நடவடிககை அறிக்கையுடன் சமர்ப்பிக்க வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தால் 2021 ஆண்டில் 400 மேசைக் கணனிகளை கொள்வனவு செய்ய திட்டமிட்டிருந்த போதும், இலக்கம் 21/1596/134 கொண்ட 2021 ஆகஸ்ட் 30 இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கொள்வனவை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அமைச்சரவை செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகைகள் செயன்முறையில் நிலவிய தாமதம் காரணமாக திட்டத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டு ஆகஸ்ட் 18 திகதி பிரசுரித்த பத்திரிகை | திசெம்பர் மாதத்தில் பணம் செலுத்த கட்டுநிதி விடுவித்துக் கொள்ளும் தாமதமும் இறக்குமதி மட்டுப்பாடு விதிக்கப்பட்டதால் பண்டங்களை குறித்த கால சட்டகத்தினுள் வழங்கல் தாமதித்தையும் கவனத்திக் கொண்டு 2021 ஆகஸ்ட் 28 திகதி நிதி அமைச்சு வெளியிட்ட 21/1596/134 இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க நேரிட்டது. | பெறுகைகள் செயற்பாடுகளை வருட துவக்கத்தில் ஆரம்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவித்தலிற்காக செலவிட்ட ரூபா 79,218 ஆன தொகை விளைவற்ற செலவொன்றாக ஆகியிருந்தது. | | |
| (ஆ) | 2021 ஆண்டில் e-Slims கருத்திட்டத்தின் கீழ் தொழிநுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்ய ஒதுக்கிய ரூபா 55.92 மில்லியன் ஏற்பாட்டை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியளவில் பெறுகைகள் செயன்முறையின் காணப்பட்ட தாமதம் காரணமாக பயன்படுத்த இயலாதிருந்தது. | e-Slims கருத்திட்டத்திற்காக் தொழிநுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதுடன் தொடர்பான பெறுகைகள் செயன்முறையை மேற்கொண்டு செல்லும் இடைநடுவே, நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை மற்றும் நிதிப் பிரச்சினை காரணமாக, நிதி அமைச்சினால் 2021.08.28 திகதி வெளியிட்ட 21/1996/134 இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் (அரச செலவின மீளாய்வு) 02 (i) பந்தி பிரகாரம், உரிய அங்கீகாரத்தின் கீழ் ஏற்பாடு ஒதுக்கபட்டிருந்த போதும், தற்போது ஆரம்பிக்கப்படாத கொள்வனவுகளை நிறுத்த வழங்கியிருந்த ஆலோசனை பிரகாரம் எமது திணைக்களம் எதிர்பார்த்தவாறு குறித்த தொழிநுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாதிருந்தது. | காலப் பகுதிக்கான ஏற்பாட்டை காலரீதியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 221,065 ஆன 01 டெப் இயந்திரம், 40 அங்குல 01 LED ரூபவாஹினி இயற்திரம் மற்றும் ஓர் பல்ஊடக புரஜெக்டரை 2022 மார்ச் 31 திகதியளவிலும் பயன்படுத்தாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | டெப் இயந்திரத்தை கந்தலை உதவி காணி ஆணையாளர் அலுவலகத்தின் குடியிருப்பு அலுவலரிற்கு வழங்க திட்டமிட்டு கொள்வனவு செய்திருந்ததுடன் அவ் அலுவலர் ஓய்வு பெறுவதால் டெப் இயந்திரத்தை விநியோகிக்க முடியாதுள்ளது. 40 அங்குல 01 LED ரூபவாஹினி இயற்திரம் மற்றும் ஓர் பல்ஊடக புரஜெக்டரை ரத்மலான கேட்போர்கூடத்தில் பொருத்த கொள்வனவு செய்துள்ளதுடன் கடந்த ஆண்டுகளில் நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக பயிற்சி நடவடிக்கைகள் நிகழ் நிலையூடாக செய்யப்பட்டதால் அத் தேவைப்பாட்டை தற்காலிகமாக இடைநிறுத்த நேரிட்டது. 2022 ஆண்டில் இவ் 02 இயந்திரங்களையும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். | தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்ய வேண்டியதுடன் பயன்படுத்தாத பண்டங்களை பயனுள்ள செயற்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான 05 வாகனங்கள் 4 ஆண்டுகளிற்கும் 7 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலமாக திணைக்கள வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுன் அவ் வாகனங்களை பழுதுபார்க்க | 04 வாகனங்களை பராதீனம் செய்யாது பழுதுபார்த்து கடமைகளுக்கு பயன்படுத்த முடியுமான இயலுமை பற்றி இயந்திர வேலை பிரதானியினால் முன்வைத்துள்ள அறிக்கை பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒரு வாகனத்தின் சில | பயன்படுத்தாத வாகனங்களை பழுதுபார்த்து செலுத்துவதற்கு அல்லது பராதீனம் செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்தங்கள் மேற்கொண்டுள்ளதுடன் தற்போது அவ்வண்டி செலுத்துவதற்கு பொருத்தமான நிலையில் உளளது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டில் ஏற்பட்டிருந்த 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக கூட்டுத் தொகை ரூபா 1,988,262 ஆன நட்டத்திலிருந்து ரூபா 1,079,050 தொகையை அறவிட அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலக்கம் PD-9781 கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை இழப்பு நட்ட பதிவேட்டிலிருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. இலக்கம் PG-9778 கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக நி.பி. 104(4) அறிக்கைக்காக கா.ஆ.நா அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் நி.பி. 109 பிரகாரம் இழப்பு நட்ட பதிவேட்டிலிருந்து பதிவழிக்க அறிக்கையிடப்படுகின்றது. இலக்கம் PD-9189 மற்றும் PF-6076 கொண்ட வாகனங்களிற்கு விபத்தினால் ஏற்பட்ட நட்டத்தை குறித்த காப்புறுதி கம்பனியிடமிருந்து அறவிட நடவக்கை எடுக்கப்படுகின்றது. இலக்கம் PC-2501 கொண்ட வாகனம் தொடர்பாக காப்புறுதி கம்பனியினால் திருத்த வேலை செய்த கம்பனிக்கு மொத்த தொகையையும் செலுத்தியுள்ளதாக அறிவித்துள்ளதுடன் விபத்து தொடர்பாக நி.பி. 104(4) அறிக்கையை தயாரிக்க முன்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இலக்கம் PF-6074 கொண்ட வாகனத்திற்குரிய நி.பி. 104(4) அறிக்கையை முன்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. | நி.பி. 109 குறிப்பிடும் ஏற்பாடுகள் பிரகாரம் இழப்பு மற்றும் நட்டம் தொடர்பாக செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டின் திசெம்பர் 23 திகதி இலக்கம் PD-6509 கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்தை நிதிக்கூற்றுக்களில் நட்டம் மற்றும் கைவிடல் கூற்றில் காட்டியிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 23 திகதி இலக்கம் PD-6509 கொண்ட வாகனத்திற்கு விபத்தொன்றால் ஏற்பட்ட நட்டம் ரூபா 2,161,650 ஆக 2021 திசெம்பர் 28 திகதியில் மதிப்பிட்டுள்ள போதும் இழந்த நட்டத்தை பதிவேட்டிற்கு உட்படுத்த தாமதித்ததால் 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நட்டம் மற்றும் கைவிடல் கூற்றிற்கு உட்படுத்தவில்லை. எவ்வாறாயினும் 2022 ஆண்டு நிதிக்கூற்றில் நட்டம் மற்றும் கைவிடல் கூற்றிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நி.பி. 110 ஏற்பாடுகள் பிரகாரம் இழப்பு மற்றும் நட்டம் ஆவணப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | ஆண்டு 2015 இற்கும் 2019 இற்குமிடையிலான காலத்தினுள் வாகன விபத்துக்களினால் ஏற்பட்ட கூட்டுத் தொகை ரூபா 2,399,395 ஆன இழப்பிற்காக காப்புறுதி | இலக்கம் PG-9781, CAQ 3619, PF 6075, PE-0626 கொண்ட வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த இழப்புக்கள் தொடர்பாக அகற்றும் கட்டளை தற்போது | நி.பி. 109 காட்டப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் இழப்பு மற்றும் நட்டம் |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்தால் ரூபா 1,592,872 உம், பொறுப்புதார அலுவலர்களிடமிருந்து ரூபா 54,887 உம், அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 751,636 ஆன இழப்பு தொடர்பாக நி.பி. 109 பிரகாரம் அகற்றும் கட்டளையை பெற்றுக் கொள்ள மீளாய்வாண்டு இறுதிவரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ளது. இலக்கம் KR-6496 கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்திற்கு நி.பி. 104(4) அறிக்கை அங்கீகாரத்திற்காக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இலக்கம் PG-9781 கொண்ட வாகன சாரதியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 30,006 ஆன தொகையை அறவிட்டு முடிவடைந்துள்ளதால் நட்டத்தை பதிவழிக்க அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தொடர்பாக செயற்பட வேண்டும். |
| (ஈ) | இலக்கம் KR – 6496 கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக நி.பி. 104(4) பிரகாரம் ‘‘நட்டங்கள் பற்றிய இறுதி அறிக்கை தயாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின்’’ பரிந்துரை பிரகாரம் அரசிற்கு ஏற்பட்ட ரூபா 338,755 ஆன நட்டத்திலிருந்த 15 சதவீதம் அதாவது ரூபா 50,813 இனை சாரதியிடமிருந்து அறவிட தீர்மானித்திருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரையும் குறித்த தொகையை அறவிட்டிருக்கவில்லை. | இலக்கம் KR – 6496 கொண்ட வாகனத்தின் விபதிதிற்குரியதாக தயாரிக்கப்பட்ட நி.பி.104 (4) நட்டம் பற்றிய இறுதி அறிக்கை அமைசின் செயலாளருக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர் சாரதியிடமிருந்த அறவிட வேண்டிய தொகையை அறவிட முன் நடவடிக்கை எடுக்கப்படும். | நி.பி. 104 (4) பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் குறிப்படப்பட்ட நியமங்கள் படி செயற்பட வெண்டும். |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டு திசெம்பர் 31 திகதி ஓய்வு பெற்ற 08 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 911,533 ஆன கடன் மீதியினுள் உள்ளடங்கி இருந்த 16 ஆண்டுகளிற்கு முன்னர் ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவரிடம் மற்றும் ஆண்டு 1 இற்கும் 2 இற்கும் இடையிலான காலத்திற்கு முன்னர் ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.2.5 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 04 உழியர்களுக்கான கடன் மீதிகள் பணிகொடையிலிருந்து அறவிட்டு தீர்க்கப்பட்டள்ளன. ஏனைய 04 ஊழியர்களுக்கு மாற்றிய ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை தொகையை செலுத்தும் சந்தர்ப்பத்தில் கடன் மீதியை அறவிட தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். | தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.2.5 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 5 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் 05 கடன் மீதிகளும் உள்ளடங்களாக வேலைத் தடை செய்யப்பட்ட 08 பேர்களிடமிருந்து | 2021 திசெம்பர் 31 திகதியன்று இருந்த வேலைத் தடை செய்யப்பட்ட 08 ஊழியர்களிற்கிடையில் 05 பேர்களிடமிருந்து 2022 ஜுன் 17 | தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட வேண்டிய கடன் மீதிகள் தொடர்பாக ஒழுக்காற்று பரிசோதனையை முடிவுறுத்தி ஒழுக்காற்று கட்டளையை செயற்படுத்தவும் தாபன விதிக்கோவை XXIV அத்தியாத்தின் 4.5 மற்றும் 4.6 பிரிவு பிரகாரம் பிணையாளர்களிடமிருந்து அல்லது மரபுரிமையாளர்களிடமிருந்து கடனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திகதியளவில் அறவிட்டிருந்த தொகை ரூபா 29,705 ஆனதுடன் ஏனை ஊழியர்களின் கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 4.5 மற்றும் 4.6 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அரச காணிகள் முகாமைத்துவ செயற்பாடுகளில் இணைந்து செயற்படும் அரச நிறுவனங்களான சனாதிபதி செயலம், பிரதேச செயலகம், சுற்றாடல் அதிகார சபை மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்களுடன் நடவடிக்கை மேற்கொள்ள மற்றும் ஈ- அரச எண்ணக்கரு பிரகாரம் அரச காணி தகவல் முகாமைத்துவ தொகுதியின் (e-slims) செயற்பாடுகளை மேற்கொள்ள இலங்கை அரச இணைய கருத்திட்டத்தை (LGN 2.0) பயன்படுத்துவதாக காணி ஆணையாளரின் இலக்கம் 1/21/LGN 2.0 கொண்ட 2018 பெப்ரவரி 21 திகதிய கடிதம் மூலம் தொலை தொடர்பு மற்றும் டிஜிடல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்த போதும், அச் செயற்பாட்டிற்காக இலங்கை அரச இணைய கருத்திட்டத்தை பயன்படுத்தை பயன்படுத்தாத காரணத்தால் ஈ- அரச எண்ணக்கருவை செயற்படுத்த திணைக்களம் பங்களிக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், இணைய சேவையை பெற்றுக் கொள்வதற்காக இரண்டு தொலை தொடர்பு கம்பனிகளுக்கு மீளாய்வாண்டில் ரூபா 5,368,856 ஆன செலவை திணைக்களம் செய்திருந்ததுடன் LGN2.0 ஊடாக திணைக்களத்திற்கு இணைய வசதிகளை வழங்க தகவல் மற்றும் தொலை தொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனத்தினால் ரூபா 448,586 ஆன கிரயமொன்றை | அனைத்து பிரதேச செயலங்கள், மாகாண மற்றும் இடை மாகாண காணி ஆணையாளர் அலுவலகங்களில் போன்றே காணி ஆணையாளர் நாயக திணைக்களத்தில் அனேக காணிக் கடமை நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக இலங்கை இணைய கருத்திட்டம் (LGN) பயன்படுத்தப்பட்ட போதும் ஒரே அலுவலகத்தில் சிலர் தொகுதிக்கு உட்செல்லும் போது இணைய வசதி மெதுவாகும் நிலைக்குற்படல் மற்றும் பிரதேச செயலங்களில் காணிப் பிரிவில் ஈடுபட்டுள்ள காணி அலுவலர் மற்றும் குடியிருப்பு அலுவலர் களத்திற்கு (காணி அமைந்துள்ள இடம்) சென்று காணிக்குரிய புவியியல் அமைப்பை KML File ஒன்றாக மற்றும் காணியின் புகைப்படமொன்றை தமது டெப் இயந்திரத்தை பயன்படுத்தி பெற்றுக் கொண்டு தொகுதிக்கு தரவேற்றல் (Upload) செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய போதிய இணைய வசதிகள் இருக்க வேண்டிய போதும் அவ் இணைய வசதிகள் இலங்கை இணைய கருத்திட்டத்தின் (LGN) கீழ் பெற்றுக் கொள்ள முடியாது.<br>அந்த பௌதீக பிரச்சினைகுரிய நிலையை குறைக்கும் வேறு நிறுவனமொன்றின் ஊடாக இணைய வசதிகளை பெற்றுக் கொள்வதனூடாக மிக்க செயற்திறனாக மற்றும் விரைந்த சேவையை வழங்க இயலுமாகியுள்ளது. | இலங்கை இணைய கருத்திட்டத்தில் (LGN2.0) காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்ய ''தகவல் மற்றும் தொலை தொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனம்'' உடன் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் மேற்கொண்டிருந்தது. | | |
| (ஈ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு சமர்பிக்கப்பட்ட காணி அமைச்சின் முன்னேற்ற அறிக்கை பிரகாரம் இலங்கையின் மொத்த காணி பிரதேசங்களின் 20 சதவீதமான அளவு அரச காணிகள் தொடர்பான நேரடி பொறுப்பை திணைக்களத்திற்கு சாட்டுவதாக இனங்கண்டிருந்ததுடன் அக் காணிகளிற்குரியதாக, 1931 ஆண்டின் திணைக்களம் நிறுவப்பட்ட திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட காணி வழங்கல்களை உள்ளடக்கி தயாரித்த காணி பதிவேடொன்றை பேணிச் சென்றிருக்கவில்லை. | அரச காணிகள் தொடர்பாக மதிப்பீடொன்றை செய்து காணித் தகவல் தொகுதியொன்றை தயாரிக்க 2020 ஆண்டு இறுதிப் பகுதியில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரச காணிகளை வழங்குதல் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதும் இத் தகவல் தொகுதியை தயாரித்ததன் ஓர் நோக்கமாகும். அது தொடர்பான தகவல்கள் தற்போது கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் திரட்டப்படுகின்றன. இவ் வேலைத் திட்டம் 2022 ஜூன் 30 திகதியுடன் முடிவடையவிருந்த போதும், நாட்டில் நிலவும் நிகழ்கால நிலைமை காரணமாக அதன் காலஎல்லை 2022 ஒக்டோபர் 31 திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. | வழங்கப்பட்டுள்ள காணி அளவுகள் தொடர்பான சரியான தகவல்களை உள்ளிட்ட பதிவேடொன்றை பேணிச் செல்ல வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் இலக்காக காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் தயாரித்தல் குறிப்பிடப்பட்டுள்ள போதும், திணைக்களம் மற்றும் மாகாண சபையினால் எதிர்பார்த்த நோக்கங்களை மேற்கொள்ளும் முன்னேற்றத்தை வேறாக குறிப்பிடாததால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை மேற்கொள்வதற்கான திணைக்ளத்தின் பங்களிப்பை மதிப்பிட முடியாமலிருந்தது. | 2021 செயலாற்றல் அறிக்கையின் 2.1 இல் குறிப்பிடப்படும் அட்டவணையின் 1.1.2 இன் கீழ் குறிப்படும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் தயாரிப்பது தொடர்பான இலக்குகள் மற்றும் முன்னேற்றம், 08 இடை மாகாண அலுவலகங்களின் மற்றும் 09 மாகான சபைகளில் இலக்ககள் மற்றும் முன்னேற்றத்தில் கூட்டாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களாக இனங்கண்டுள்ள அனுமதிப்பத்திர விநியோகத்திற்கு திணைக்களம் மற்றும் மாகாண சபைகள் பங்கழிப்பு செய்யும் விதத்தை வெவ் வேறாக செயலாற்றல் அறிக்கை மூலம் சமர்ப்பிக்க வெண்டும். |

## 5. மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டில் திசெம்பர் 31 திகதிக்கு சிரேஷ்ட மட்டத்தின் 18 பதவிகள் உள்ளடங்களாக 289 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அப் பதவிகளுக்காக ஊழியர்களை | இந்த திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்பட்ட 6 பிரதி காணி ஆணையாளர் அலுவலகங்களை காணி ஆணையாளர் அலுவலகங்களாக மாற்றியதுடன் சிரேஷ்ட மட்ட பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதுடன் | வெற்றிட பதவிகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்க்க அல்லது சேவை தேவைபாட்டின் மீது |

| | | |
|---|---|---|
| ஆட்சேர்க்க அல்லது சேவை தேவைபாட்டின் மீது அங்கீகாரிக்கப்பட்ட ஆளணியை திருத்தவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச சேவைகள் மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அமைச்சு அறிவூட்டப்பட்டுள்ளது. மேலும் இலங்கை நிருவாக சேவை III வகுப்பின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச சேவைகள் மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அமைச்சிடம் கோரியுள்ளது. அதன் பிரகாரம் மேற்படி சிரேஷ்ட மட்ட பதவிகள் இந்த திணைக்களத்தின் நிருவாகத்திற்கு அத்தியவசியம் ஆகையால் அங்கிகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்த இயலுமாக இல்லை.<br>அரச செலவின முகாமைத்துவம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 21/1596/304/134 மற்றும் 2021/8/31 திகதிய அமைச்சரவை பத்திர தீர்மானம் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால் மேற்படி வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது. மேலும் ஆரம்ப சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு பலநோக்கு அபிவிருத்தி திணைக்களத்திக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.